சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 15.09.2025

வா.சா.2 – பொன்ராஜ் S/o. ராதாகிருஷ்ணன்

O.S. No.256/2022

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தமிழில் தெரியும். வள்ளி என் தாயார். வினோத்குமார் என் உடன்பிறந்த சகோதரர். சாட்சியிடம் 30.06.2019 தேதியிட்ட வா.சா.ஆ.2 கடன் பத்திரம் பற்றி கேட்கப்பட்டது அதுபற்றி தனக்கு தெரியும் என்று சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி வா.சா.ஆ.2 கடன் பத்திரம் எங்கு வைத்து, எப்போது எழுதிகொடுக்கப்பட்டது என்றால் எங்கள் வீட்டில் வைத்து 30.06.2019 அன்று பாண்டியராஜன், சரோஜா, மல்லிகா, ஆகியோர் என் தாயாருக்கு எழுதி கொடுத்தார்கள். மேற்படி கடன் பத்திரம் எழுதி கொண்ட போது, அங்கு யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் என் மாமா சஞ்சீவி, என் தாயார் வள்ளி, என் பாட்டி பிச்சையம்மாள் ஆகியோர் உடன் இருந்தார்கள். நான் மேற்படி வா.சா.ஆ.2 கடன் பத்திரத்தில் 2வது சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன். பொதுவாக கடன் பத்திரங்களில் கடன் பெறுவோர் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் கடன் பெறுவோர்களும், சாட்சிகள் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் சாட்சிகளும் கையெழுத்திடுவது வழக்கம் என்று தெரியுமா என்றால் தெரியும். நான் மேற்படி வா.சா.ஆ.2 பத்திரத்தில் கடன் கொடுத்தவர் என்ற இடத்தில் 2வது நபராக கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் தான் கடன் கொடுத்தார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் கிரையபத்திரத்தின் அசலை பிரதிவாதிகளே வைத்துகொண்டு நகலை கொடுத்ததாக

குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ம் தாளில் 4வது வரியில் அசல் கிரைய பத்திரத்தை ஒப்படைத்ததாக வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வது வழக்கம். என்னுடன் சேர்ந்து என் மாமா சஞ்சீவியும் கையொப்பம் இட்டுள்ளார். வாதிகளாகிய வள்ளி மற்றும் வினோத்குமாரும், சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ளவர்களும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 18.07.2021ல் சிலைமான் காவல்நிலையத்தில் குற்ற எண்.340/2021ல் வாதிகள் மீது கந்துவட்டி தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்காகும். அதில் வாதிகள் அதிகப்படியான வட்டி கேட்டு துன்புறுத்தியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது என்றால் தெரியும். மேற்படி குற்ற வழக்கில் வாதிகளாகிய என் தாயாரும், சகோதரரும் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்தார்கள் என்றால் சரிதான். நான் வாதிகளுக்கு ஆதரவாக உறவினர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள், வாதிகளுக்கு கொடுக்கவேண்டிய கடன் தொகையை முழுவதுமாக செலுத்திவிட்ட பின்பும், பொய்யான ஆவணங்களை கொண்டு பொய் வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கடன் பத்திரத்தை பிரதிவாதிகள் எழுதிகொடுக்கவே இல்லை என்றும் அதில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.09.15 18:11:24 +0530

Sub Judge

Melur